**O.S. No. 115/2020 நாள் 21.04.2022 PW 1 –திருமதி. ஆழ்வார்**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பெயரில் தொடர்ந்து முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.)

**முதல்விசாரணை தொடர்ச்சி**

13.03.1995 தேதியிட்டு எனது கணவர் காலஞ்சென்ற ஆத்தி என்பவர் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான எனது மகன் வழிப்பேரன் பெரியராஜ் என்பவருக்கு எழுதிக்கொடுத்து, அந்த உயில் ஆவணம் தூத்துக்குடி மேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 13/1995 என பதிவு செய்யப்பட்டுள்ள உயில் ஆவணத்தின் அசல் உயில் ஆவணம் பிரதிவாதிகள் வசம் உள்ளது. எனவே அந்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் வா.சா.ஆ-13. 10.10.2003 தேதியிட்டு எனது கணவர் காலஞ்சென்ற ஆத்தி என்பவர் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான எனது மகன் வழிப்பேரன் பெரியராஜ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த, அந்த உயில் ஆவணம் தூத்துக்குடி மேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 56/2003 என பதிவு செய்யப்பட்டுள்ள உயில் ஆவணத்தின் அசல் உயில் ஆவணம் பிரதிவாதிகள் வசம் உள்ளது. எனவே அந்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் வா.சா.ஆ-14. மேற்படி உயில் ஆவணங்கள் பிரதிவாதிகளால் மோசடியாக தயார் செய்யப்பட்ட உயில் ஆவணங்கள் ஆகும். அதனால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

குறுக்குவிசாரணை தொடரும்.